ஸ்ரீமதே இராமாநுஜாய நம:

மதுரகவி தாசன் இயற்றிய

# நரசிங்கமதாய உருவே

உள்ளத்தினுள்ளே உறைகின்ற மாலை
உள்ளுவாருக்கெல்லாம் உளனென்று காட்டிய
பிள்ளையைச் சீறியவண் பிதாவினைப் பிளந்த
உள்ளத்துள் நிறை நரசிங்கமதாய உருவே க

பொன்மேனியுடைப் புகழுடைப் புண்ணியன்
தன்மேனி தனைத் தானே திரித்து
பொன்னாகமுடை இகழவுணனைப் பிளந்த
என்னுள் நிறை நரசிங்கமதாய உருவே உ

எங்கும் உள்ளானென மகன் இயம்ப
இங்கு இல்லை என்று தூணை இடிய
அங்கே அவுணனை அழியத் தோன்றிய
எங்கும் நிறை நரசிங்கமதாய உருவே ௩

மகன் மக்களுக்கு அல்லாதவன், அவுணன்
மகனுக்காய்த் தூணில் பிறந்த தூயவன்
நகங்கொண்டு இரணியன் மார்வை இடந்த
அகம் நிறை நரசிங்கமதாய உருவே ச

உருவம் ஆயிரம் உடைய உத்தமன்
உருவமல்லா உருவை ஒருவனுக்காக் கொண்ட
திருவின் மணாளன், திசையெங்கும் திகழ் மனக்
கருவெல்லாம் நிறை நரசிங்கமதாய உருவே ரு

தானவன் பிள்ளைக்காகத் தரணி நிறைந்தவன்
தான் அவன் பிள்ளைக்காகத் தம்பம் பிறந்து
வானவரும் எவரும் எல்லாமும் தொழ நின்ற என்
ஆனாகி என்னுள் நிறை நரசிங்கமதாய உருவே சா

நரனோ இவன்? சீரிய சிங்கமோ இவன்?
சுரனோ இவன்? சுராசுரர்களும் அறியாப்
பரனோ இவன்? பிள்ளைக்கெளியனாய் பிறந்த
உரம் நிறை நரசிங்கமதாய உருவே எ

சீற்றமுடைச் சிங்கமதாகி அசுரனுக்குக்
கூற்றமதாகிக் குற்றமற்ற பிள்ளக்கா உரு
மாற்றமுடைத் தேவனாகி யாரும் கண்டறியா
ஏற்றம் நிறை நரசிங்கமதாய உருவே அ

ஸ்ரீமதே இராமாநுஜாய நம:

இனி அவன் பிள்ளையைச் சீறா வண்ணம்
இனியவன் ஆளரியாய் அசுரனைக் கீண்டு
தனி ஒருவனாய்த் தரணி எல்லாம் படைத்த
தனி அருள் நிறை நரசிங்கமதாய உருவே ௯

நிறை நரசிங்கமதாய உருவை தன்னுள்ளே
நிறை காஞ்சியின் அனந்தன் வேங்கடார்யன்
இறை எம்பெருமானை எவ்வுலகுக்கும் நாயகனை
இறைஞ்சிய இப்பாடலைத் தொகுத்து இறைஞ்சினானே க0

---